**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு M. சந்திரமோகன் பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண். 109/2022**

**CNR NO.TNMY07-000142-2022**

1. சீர்காழி தாலுக்கா, சீர்காழி டவுன், கீழவெளி என்ற முகவரியில் வசிக்கும் பாலகிருஷ்ணன் குமாரர், 70 வயதுடைய அர்ச்சுணன்.
2. சீர்காழி தாலுக்கா, சீர்காழி டவுன், கீழவெளி என்ற முகவரியில் வசிக்கும் அர்ச்சுணன் குமாரர், 45 வயதுடைய பாரதிதாசன். ...**வாதிகள்**

**...எதிர்...**

1. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சிபி, சீர்காழி டவுன், காமராஜர் வீதியில் அலுவலகம் வைத்துள்ள சீர்காழி நகராட்சியின் ஆணையர்.
2. மயிலாடுதுறை தாலுக்கா மற்றும் மயிலாடுதுறை டவுனில் அலுவலகம் வைத்துள்ள மாவட்ட ஆட்சியர்.
3. சீர்காழி தாலுக்கா, சீர்காழி டவுனில் அமைந்துள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாட்சியர் அவர்கள் ...**பிரதிவாதிகள்**

தாவா வழக்கு சொத்தை வாதிகள் அமைதியான முறையில் அனுபவித்து வருவதை 1ம் பிரதிவாதியோ அவர்களது ஆட்களோ, அல்லது முகவர்களோ எவ்வித இடைஞ்சலும், இடையூறும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத்தொகை கோரியும், வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 06.04.2022, 27.04.2022 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 27.04.2022 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் மற்றும் இடம் | 28.03.2022-ம் தேதியில் சீர்காழி தாலுக்கா, சீர்காழி டவுன் கீழவெளியில் உற்பத்தி |
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | தாவா வழக்கு சொத்தை வாதிகள் அமைதியான முறையில் அனுபவித்து வருவதை 1,2 பிரதிவாதியோ அவர்களது ஆட்களோ, அல்லது முகவர்களோ எவ்வித இடைஞ்சலும், இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற 1ம் வாதியின் பொருமானம் ரூ.1000/- என மதிப்பீடு |

| | |
|---|---|
| | செய்யப்பட்டு அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.30/− மற்றும் 2ம் வாதியின் பொருமானம் ரூ.1000/− என மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.30/− ஆகக் கூடுதல் ரூ.2000/− என மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.60/− நீ.ம.க.ச பிரிவு 27(c) படி செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என் முன்பாக இன்று 21.04.2026 இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. கார்த்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. பன்னீர்செல்வம் அவர்கள் ஆஜராகியும், 2,3 பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இவ்வழக்கு விசாரணைக்காக சிறப்பு பட்டியலில் (Special List)−ல் போடப்பட்டிருந்து, வாதிகள் தரப்பில் வழக்கை மேல் நடத்த தயாராக இல்லை என்பதால், வாதிகளின் தவறுகையின் காரணமாக இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>தீர்ப்பாணை</u>**

1. வாதிகளின் தவறுகை காரணமாக இந்த வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

**<u>சொத்து விபரம்</u>**

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை பதிவு மாவட்டம், சீர்காழி சார்−பதிவகத்தை சேர்ந்த, சீர்காழி தாலுக்கா, சீர்காழி நகராட்சிக்குட்பட்ட கீழவெளித் தெருவில் புல எண்.326/5ல் நகர புல எண் 27/27ல் 00456 சதுர மீட்டரில் அமைந்துள்ள இரண்டு கூறை வீடுகள் மின் இணைப்பு உட்பட. மின் இணைப்பு எண் 402.

**நான்கெல்லைகள்:**

குஞ்சம்மாள் மனைக்கு மேற்கு, தார் சாலைக்கு வடக்கு மற்றும் கிழக்கு, சாந்தகுமார் நஞ்சைக்கு தெற்கு இதற்குட்பட்டது.

2026−ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/− மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>தீர்ப்பாணை:</u>**
அசல் வழக்கு எண்.109/2022
நாள்.21.04.2026.